செ.வெ.எண் :253/2009செமதொஅ நாள்: 15.08.2009

**<u>காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலுள்ள அண்ணா காவல் அரங்கில் தேசிய கொடியினை ஏற்றி வைத்து, ரூ.8.33 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சந்தோஷ் கே. மிஸ்ரா,இ.ஆ.ப. அவர்கள் வழங்கினார்.</u>**

இந்திய திருநாட்டின் 63வது சுதந்திர தின விழா நாடு முழுவதும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. அதனையொட்டி, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலுள்ள அண்ணா காவல் அரங்கில் இன்று(15.08.2009) காலை 08.30 மணிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சந்தோஷ் கே.மிஸ்ரா,இ.ஆ.ப. அவர்கள் தேசிய கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். பின்னர் காவல்துறை, ஊர்காவல் படை, வனத்துறை, பச்சையப்பன் கல்லூரி தேசிய மாணவர் படை, பச்சையப்பன் பள்ளி நாட்டுநலப் பணித் திட்ட மாணவர்கள் மற்றும் தேசிய சாரணர் படை மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து ரூ.8.33 இலட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு திட்டமான இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ், வட்ட அளவில் அதிகமான அளவில் வீட்டுமனை பட்டாக்கள் வழங்கிய தாம்பரம் வட்டாட்சியர்(பொ) திரு.எஸ்.கோவிந்தராஜ், செங்கல்பட்டு வட்டாட்சியர்(பொ) திரு.எஸ். வெங்கடேசன், திருப்பெரும்புதூர் வட்டாட்சியர் திரு. டி.மோகன்ராஜ் ஆகியோரை பாராட்டி கேடயங்களையும், கொடி நாள் வசூலில் இலக்கு எய்திய மாவட்ட பதிவாளர் திருமதி. எம்.பானுமதி, இலத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர்(ஓய்வு) திரு.எஸ். செல்லப்பன், கூட்டுறவு தணிக்கைத்துறை உதவி இயக்குநர்(ஓய்வு) திரு. பார்த்தசாரதி, வட்டாட்சியர்(ஓய்வு) திரு.இ.பாலசுப்பிரமணியன் ஆகியோருக்கு அரசின் பாராட்டு சான்றிதழ் மற்றும் பதக்கங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார். 2008-2009 ஆம் ஆண்டில் சொத்து வரி மற்றும் இதர வரியினங்களில் 100 சதவீதம் குறுகிய காலத்தில் வசூல் எய்தி சாதனை புரிந்த பெருங்களத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.எம்.ஜெ.சம்பத் மற்றும் 2008-2009 ஆம் ஆண்டு அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தில் அனைத்து பணிகளையும் விரைந்து முடித்து சாதனை புரிந்த சிட்லபாக்கம் பேரூராட்சியின் செயல் அலுவலர் திரு.என்.முருகன், இளநிலை உதவியாளர் திரு.ஆர்.திருநீலகண்டன் ஆகியோருக்கு பாராட்டு சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சந்தோஷ் கே.மிஸ்ரா,இ.ஆ.ப. அவர்கள் வழங்கினார்.

சுதந்திர தினத்தினை முன்னிட்டு பள்ளி மாணவ, மாணவியரின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. இக்கலை நிகழ்ச்சிகளில் முதல் இடத்தை சேலையூர் சியோன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியும், இரண்டாம் இடத்தை சின்ன காஞ்சிபுரம் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியும், மூன்றாம் இடத்தினை பெரிய காஞ்சிபுரம் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியும பெற்றன. இவர்களுக்கு பரிசுகளையும், சான்றிதழ்களையும் மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி. சக்தி பெ.கமலாம்பாள், காவல்துறை கண்காணிப்பாளர் திரு.பிரேம் ஆனந்த் சின்கா,இ.கா.ப., மாவட்ட ஆட்சியரின் துணைவியார் திருமதி.சோனல் மிஸ்ரா,இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.நம்பிராசன், முதன்மை கல்வி அலுவலர் திரு.வெ.ரமணா,அனைத்துத் துறை அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.

வெளியிடுபவர்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.